Registered as a News Paper　　பக்கங்கள் 02　　விலை ரூபா 3-50

# ஈழநாதம்

விசேட பதிப்பு

நாதம் 08　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　புரட்டாதி 16　　(02 - 10 - 1992)　　வெள்ளிக்கிழமை　　ஓசை 227

## வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

குடா நாட்டில் மருந்துப் பொருள்களுக்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான நோயாளிகள் நோய்களைக் குணப்படுத்த முடியாமல் தினசரி அவதியுறுகின்றனர். வருடக்கணக்காக நீடித்து வரும் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு கடந்த இருவாரங்களாக மிகத் தீவிரமடைந்துள்ளது. புச்கிய உயிர்காப்பு மருந்துப் பொருள்களுக்குக் கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் நோயால் அவதியுறும் பல நோயாளிகள் மரண அபாயத்தை எதிர் நோக்கும் நிலை உருவாகியுள்ளது. பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் கிராமிய வைத் ( 2ஆம் பக்கம் பார்க்க)

### கட்டைக்காட்டில் புலிகளின் மகத்தான சாதனை

# ஆயுதக் கிடங்கை புலிகள் கைப்பற்றினர்

# 200க்கு அதிகமான நவீன ஆயுதங்கள் மீட்பு

## 50 கலிபர், ஜி. பி, எம். ஜி. துப்பாக்கிகள் ஒன்றரை இலட்சம் ரவைகள் பறிப்பு

[யாழ்ப்பாணம்]

இன்று அதிகாலை கட்டைக்காட்டில் சிங்கள இராணுவத்தின் ஆயுதக்கிடங்கை கைப்பற்றி பெருந்தொகையான நவீன ஆயுதங்களை மீட்டெடுத்து தமிழீழ ஆயுதப் போராட்ட வரலாற்றில் என்றும் நிகழாத ஒரு மகத்தான இராணுவ சாதனையை புலிப்படைப் போராளிகள் நிலைநாட்டினர். இந்தத் தாக்குதலின் போது 50 கலிபர், ஜி. பி. எம். ஜி துப்பாக்கிகள், 200 க்கும் அதிகமான தானியங்கிகள், ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான ரவைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தப் பெரும் தாக்குதலில் மகளிர் படையணி இம்ரான் - பாண்டியன் படையணி, கடற்புலிகள் கூட்டாய் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நள்ளிரவு 11-55 மணிக்கு விடுதலைப்புலிகளின் விசேட படையணிகள் இத்தாக்குதலை ஆரம்பித்தன. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியும், இம்ரான்—பாண்டியின் விசேட படையணியும், கடற்புலிகளும் தொடக்கிய இத் தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம்வரை நீடித்தது. இதன் பின்னர் கட்டைக் காடடு இராணுவ மினிமுகா கொண்டுவரப்பட்டன.

இவ் ஆயுதக்கிடங்கில் இருந்து பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன சிறிலங்கா இராணுவத்துடனான போரில் இவ்வளவு பெருந்தொகைஆயுதங்களை விடுதலைப் புலிகள் இதுவரை கைப்பற்றியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்க

ஆயினும், கணக்கிடப்பட்டவறுள் 200க்கு மேற்பட்ட பெல்ஜியம் தயாரிப்புஎப். என். சி தானியங்கித் துப்பாக்கிகளும் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட 5 56, ரக ரவைகளும் அடங்குகின்றன.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஒருதொகுதி ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ எப். என் சி ரக

★ 5 56 ரவைகள் லட்சத்திற்கு மேல் - 1½
★ 50 கலிபர் துப்பாக்கி - 01
★ மினி இலகு இயந்திரத் துப்பாக்கி ஜி.பி எம் ஜி - 02
★ மக் பொது நோக்கு இயந்திரத்துப்பாக்கி - 01
★ 60 எம். எம். மோட்டார் - 01
★ ஆர் பி ஜி ஷெல் - 50

கைப்பற்றப்பட்ட ஆயுதங்

## 14 போராளிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கட்டைக் காட்டில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் 14 வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இம் மாபெரும் சாதனைக்கு தங்களை அர்ப்பணித்த வேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## இறந்தோரை காவிச் செல்லும் சிறிலங்கா விமானப்படை

(நமது நிருபர்)

கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிப்பகுதி இராணுவ மினி முகாம்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இறந்த, காயமடைந்த இராணுவத்தினரை காவிச் செல்லும் பணியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் ஈடுபட்டிருந்தன.

அதிகாலை முதல் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் நடமாட்டம் குடாநாட்டில் அதிகரித்துக் காணப்பட்டது நள்ளிரவு வேளை விடுதலைப் புலிகள் கட்டைக்காட்டு சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற் கொண்ட தாக்குதலின் போதுபடுகாயமடைந்தபெருந் தொகையான இராணுவத்தினரை ஆனையிறவிலிருந்து பலாலி இராணுவ முகாமிற்கும் பலாலியிலிருந்து அநுராதபுரம் மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளுக்கும் ஏற்றிச் செல்லும்பணியிலேயே இவை ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது இவற்றுக்காக உலங்குவானூர்தி சீப்ளேன் அவ்றோவிமானம் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

## தளபதிகள் குமரப்பா, புலேந்திரனுக்கு

பிடத்தக்கது.

நள்ளிரவு 11-55 மணிக்கு விடுதலைப்புலிகளின் விசேட படையணிகள் இத்தாக்குதலை ஆரம்பித்தன. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியும, இம்ரான்—பாண்டியின் விசேட படையணியும், கடற்புலிகளும் தொடக்கிய இத் தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம்வரை நீடித்தது. இதன் பின்னர் கட்டைக்காடடு இராணுவ மினிமுகாமும், ஆயுதக் கிடங்கும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன.

இவ் ஆயுதக்கிடங்கில் இருந்து பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன சிறிலங்கா இராணுவத்துடனான போரில் இவ்வளவு பெருந்தொகைஆயுதங்களை விடுதலைப் புலிகள் இதுவரை கைப்பற்றியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் முழு விபரங்களும் இதுவரை வெளிவரவில்லை ஆயினும், கணக்கிடப்பட்டவறுள் 200க்கு மேற்பட்ட பெல்ஜியம் தயாரிப்புஎப் என். சி தானியங்கித் துப்பாக்கிகளும் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட 5 56, ரக ரவைகளும் அடங்குகின்றன.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஒருதொகுதி ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ எப். என் சி ரக தானியங்கி துப்பாக்கி -200க்கு மேல்,
★ 5 56 ரவைகள் - 12 லட்சத்திற்கு மேல்
★ 50 கலிபர் துப்பாக்கி - 01
★ மினி இலகு இயந்திரத் துப்பாக்கி ஜி.பி எம் ஜி - 02
★ மக் பொது நோக்கு இயந்திரத்துப்பாக்கி - 01
★ 60 எம். எம். மோட்டார் - 01
★ ஆர் பி ஜி ஷெல் - 50

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் முழு விபரமும் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும்.

# 30க்கு மேற்பட்ட படையினர் பலி
# பெருமளவு இராணுவம் படுகாயம்

கட்டைக காட்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவில் இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

இதேவேளை, இத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை மேலும், அதிகமாக இருக்கலாம் என நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

# $2\frac{1}{2}$ மைல் ராணுவ வேலி அழிப்பு
# மினி முகாம் முற்றாகத் தகர்ப்பு

(யாழ்ப்பாணம)

நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலீல் கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்த இரண்டரை மைல் நீளமான இராணுவ வேலி உட்பட மினிமுகாம் ஒன்றும் தாக்கி அழிக்கப்பட்டது,

இரவு 11.55 மணிசகு மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதலைத் தொடுத்தனர். சரியாக ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற உக்கிர தாக்குதலின் பின் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. மினிமுகாமிலிருந்த ஆயுதக் கிடங்கும் கைப்பற்றப்பட்டது. இதிலிருந்த பெருமளவு ஆயுதங்கள் அள்ளிவரப்பட்டன.

இதேவேளை இரண்டரை மைல் நீளத்திற்கு அமைந்திருந்த காவலரண்களும் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன. புலிகளால் கைப்பற்றப்பட்ட மினிமுகாம் பகுதியிலும், காவலரண் பகுதியிலும் அதிகாலை 5.00 மணிவரையும் நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகள் பின்னர் முகாமையும், காவலரண்களையும் அழித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினர்

# கனரக ராணுவவண்டிகள் அழிப்பு
# இரு வாகனங்கள் புலிகளால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலில் மூன்று கனரக வாகனங்கள் புலிகளினால் முற்றாக அழிக்கப்பட்டன. இரண்டு இராணுவத்தினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகளால் இராணுவ மினிமுகாம்மீதும், காவலரண்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளையில் உதவிக்கு வந்த மூன்று கவசவாகனங்களில் இரண்டு கண்ணிவெடியில் சிக்கி முற்றாக அழிந்தன. ஒன்று விடுதலைப் புலிகளின் தாங்கி எதிர்ப்பு ஏவுகணை மூலம் சேதமாக்கப்பட்டது.

இதேவேளை மினிமுகாமில் இருந்த லான்ட் குறூசர் வாகனம் ஒன்றும், நான்கு சுழல் சக்கர ட்ராக்டர் ஒன்றும் எதுவித சேதமுமின்றிப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

முகாம்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இறந்த, காயமடைந்த இராணுவத்தினரை காவிச் செல்லும் பணியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் ஈடுபட்டிருந்தன.

அதிகாலை முதல் சிறிலங்கா [illegible] புலிகள் கட்டைக்காட்டு சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற் கொண்ட தாக்குதலின் போதுபடுகாயமடைந்தபெருந் தொகையான இராணுவத்தினரை ஆனையிறவிலிருந்து தியசாலைகளுக்கும் ஏற்றிச் செல்லும்பணியிலேயே இவை ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது இவற்றுக்காக உலங்குவானூர்தி சீபிளேன் அவ்றோவிமானம் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

# தளபதிகள் குமரப்பா, புலேந்திரனுக்கு
# கிளிநொச்சியில் அஞ்சலிக்கூட்டம்

(நமது நிருபர்)

இந்திய அரசின் நயவஞ்சகத்தால் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப்டினன்ட் கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகள், வரிப்புலி லெப் கேணல் சந்திரன் மற்றும் கிளிநொச்சி, வவுனியாக் கோட்டத்தில் ஒன்பதாம் பத்தாம் மாதங்களில் நினைவு கூரப்பட வேண்டிய மாவீரர்கள் நினைவாக எதிர்வரும் 5-ம்திகதிவன்னிமாவட்டத்தில் நினைவஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடை பெறவுள்ளன.

இந்திய அரசின் நயவஞ்சக வார்த்தைகளை நம்பியதால் தமிழீழக் கடற்பரப்பில் வைத்துக் கைதாகி கொழும்புக்குக் கொண்டு செல்ல முற்பட்ட போது கொள்கையின் படி நஞ்சை உண்டுஎமது நெஞ்சை உருக்கிய தியாகிகள் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளையும், கொக்காவில் சிங்களப் படை முகாம் தகர்ப்பின்போது இம் மண்ணின் மைந்தர்களாகிய மாவீரர்களையும், கொக்காவில் முகாம் தகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்து சிகிச்சைக்காக இந்தியாவுககுச் செல்லும் வழியில் வங்கக் கடலில் சிங்களப் படையினருடனான மோதலின்போது வரலாறாகிய வரிப்புலி லெப். கேணல் சந்திரன் (கண்ணாடி) மற்றும் கிளிநொச்சி வவுனியாக் கோட்ட ஒன்பதாம் பத்தாம் மாதம் நினைவுகூரப்பட வேண்டிய மாவீரர்களின்நினைவாக எதிர்வரும் 5-10 92அன்று வன்னிமாவட்டத்தில் வட்டக்கச்சியிலும், கனகராயன் குளத்திலும் மாலை 8 30 மணியளவில் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் பங்குகொண்டு இவ்மாவீரர்களை தங்கள் உளக்கோயில்களில் அமர்த்திப் பூசிக்குமாறு தமிழீழ மக்களை வன்னிமாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனா.

# லெப். கேணல் சுபனுக்கு
# மக்கள் இறுதி அஞ்சலி

பூநகரி பள்ளிக்குடா 62 காவலரண்கள் தகர்ப்பில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் சுபனின் புகழுடல் கடந்த ஞாயிறன்று பிறபகல் வன்னி, கிளிநொச்சி பகுதியிலும் அன்றைய தினமே மன்னார் மாவட்டத்து பூநகரி நல்லூர், பல்வராயன்கட்டு, வெள்ளாங்குளம் பகுதிகளில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் சிறப்புத் தளபதியின் வீர மரணச் சம்பவம் தம்குடும்பத்தின் சுமையை தாங்கும் தலைவனை இழந்தது போன்ற ஆழமான உணர்வை மக்களின் அழுகுரல்களும், குழந்தைகளின் சோக முகங்களும் காணக்கூடியதாக இருந்தது. தளபதி சுபனின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் இலுப்பைக்கடவை பாடசாலையில் வைக்கப்பட்டது அதன் பின்னர் மாலை 5 மணியளவில் தளபதியின் சொந்த இடமான கள்ளியடியில் அமைந்துள்ள அவருடைய வீட்டில் புகழுடல் ஒப்படைக்கப்பட்ட போது அப்பகுதியே பலமணி நேரம். ஸ்தம்பித்துப்போய் எங்கும்அழுகுரலாக இருந்தது.

இதன்பின்னர் விடத்தல் தீவிலும், பெரிய மடுவிலும், தட்சணா மருதமடுவிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் அன்றைய தினம் பண்டிவிரிச்சான் பிரதான முகாம் ஒன்றில் போராளிகளினதும், பொது மக்களின் பார்வைக்காகவும் வைக்கப் பட்டது.

திங்கள் காலை தளபதி சுபனின் புகழுடல் வைப்பதற்காக அமைககப்பட்ட விசேட ஊர்தியின் பவனி பண்டிவிரிச்சானில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் மடுவிற்கு சென்று கொண்டிருந்தபோது போராளிகளினது அணிவகுப்பும் வாகனங்களின் அணிவகுப்பும் நடைபெற்றது மடுப்பகுதி மக்கள் இவ் ஊர்வலத்தின் போது கலந்துகொண்டு கண்ணீருடன் மலர் அஞ்சலி செலுத்தினர்.

## மேலதிக விபரம் நாளை

கட்டைக்காட்டுத் தாக்குதல் பற்றிய மேலதிக விபரங்கள் நாளை வெளிவரும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# புலிகளால் பதவியா மினிமுகாம் தகர்ப்பு:

# 20 ஆயுதப்படையினர் பலி: பலர் படுகாயம்

## உதவிக்கு வந்த ராணுவம் விரட்டியடிப்பு

[நமது நிருபர்]


பதவியா பராக்கிரமபுரப் பகுதியில் 'கோங்வேவ' மினிமுகாம் மீது நேற்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி இம் மினிமுகாமைக் கைப்பற்றினர். முப்பது நிமிட உககிர சண்டையின் பின் இம்முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதேவேளை, அண்மைய இராணுவ முகாம்களில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினரையும் புலிகள் விரட்டியடித்தனர்.

இச்சண்டையில் ஓர் அதிகாரி உட்பட பதினைந்திற்கு மேற்பட்ட இராணுவத்தினரும், ஐந்திற்கும் மேற்பட்ட ஊர்காவற் படையினரும் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினரும், பல ஊர்காவற்படையினரும் காயமடைந்தனர். இம் முகாமிலிருந்து பெருமளவு இராணுவ தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர். இம்மோதலில் புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.


நேற்று நள்ளிரவு 12-00 மணியளவில் இத்தாக்குதல் விடுதலைப்புலிகளால் தொடுக்கப்பட்டது சுமார் 50 இராணுவத்தினரும், ஊர்காவற் படையினரும் இருந்த இந்த முகாமை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினர். அரை மணித்தியாலம் இடம்பெற்ற உககிரச் சண்டையின் பின் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதேவேளை, இச்சண்டையானது சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றது. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் போக பலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

இம் மினி முகாமைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அம் முகாமிலிருந்த சகல இராணுவ தளபாடங்களைக் கைப்பற்றிய பின்னர் முகாமை தீ வைத்து முற்றாக எரித்தனர்.

இத் தாக்குதல் இடம்பெற்ற வேளை பதவியாப பக்கமாக சுமார் ஒரு மைல் தொலைலிருந்த பராக்கிரமபுர இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு வநத இராணுவததினர் சிறிது தூரம் வந்தபோது விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர், அவர்கள் முகாமிற்குள் சென்று பதுங்கிக் கொண்டனர், இம் முகாமிலிருந்து ஆட்லறி செல்தாக்குதலும் இடம் பெற்றது, அத்தோடு கைப்பற்றப்பட்ட மினி முகாமிற்கு ஒரு மைல் தொலைவில் மாமடுப் பக்கமாகவும் இராணுவ முகாமொன்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## நான்கு வேங்கைகள் வீரச்சாவு



கப்டன் அத்தி



லெப். அரவிந்தன்



லெப். விகடன்



வீரவேங்கைசேரமான்

பதவியா கோ...

கப்டன் அத்தி (கணபதிப்

சிவரூபன் 4ஆம் கண்டம் கற்

### அரசின் பரிசை ஏற்க சிங்கள எழுத்தாளர் மறுப்பு

(கொழும்பு)

'பரட்பாவய'என்ற நாவலை எழுதிய பிரபல சிங்கள எழுத்தாளர் எச். ஏ செனிவரெட்ணா அரசு வழங்கிய 25,000 ரூபா பரிசையும், சான்றிதழையும் ஏற்க மறுத்துள்ளார். அடக்குமுறை ஆட்சியை நடத்தும் இந்த அரசிடமிருந்து இந்தப் பரிசுத் தொகையை ஏற்க தனது மனட்சாட்சி இடம்தரவில்லை என்று செனிவரெட்ணா கலாசார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

1991 இல் வெளியான சிறந்த சிங்கள நாவலுக்கான பரிசையே இவர் ஏற்கமறுத்தார். இப்பரிசு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் ஞாயிறன்று மகியங்கனை சாகித்திய விழாவில் வழங்கப் படவிருந்தது நாவலாசிரியர் எச். ஏ. செனிவரெட்ணா ஒரு வழக்கறிஞருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்திய

...தியசாலை, மற்றும் ஏனைய தரத்திலான அரச மருத்துவ மனைகள் உட்பட யாழ். போதனா மருத்துவமனை ஆகியவற்றில் சில மருந்துப் பொருள்கள் முற்றாக தீர்ந்து விட்டது சில வகை மருந்துப் பொருள்கள் தீர்ந்து விடும் நிலையில் உள்ளது

ஈர்ப்புவலி, குக்கல், தொண்டைக்கரப்பன் அம்மை, பொக்குளிப்பான், இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்களுக்கான நோய்த் தடுப்பு ஊசி மருந்து வகைகள் முற்றாகத் தீர்ந்து விட்டன இவற்றைவிட காயங்களுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் வலிகுறைக்கும் மருந்துப் பொருள்கள் ஆகியவையும் தீர்ந்துவிடும் நிலையில் உள்ளது மேற்படி மருத்துவமனைகளுக்குச் செல்லும்

வடக்கு - கிழக்கு

### 25 கோடி புனர்வாழ்வுநிதி

கொடி வாரம

# நான்கு வேங்கைகள் வீரச்சாவு



கப்டன் அத்தி



லெப். அரவிந்தன்



லெப். விகடன்



வீரவேங்கைசேரமான்

பதவியா கோங்வேவவில் உள்ள சிறிலங்கா இராணுவ மினி முகாம் மீது நேற்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் வெற்றிகரதாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத் தாக்குதலில் நான்கு விடுதலைப் புலி போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் அத்தி (கணபதிப் பிள்ளை விஜயசேனன், ஸ்கந்தபுரம்,கிளிநொச்சி) லெப்டினன்ட் அரவிந்தன் (தங்கவேல் ரவிஜெயந்திநகர் கிளிநொச்சி) லெப்டினன்ட் விகடன் (சாமிநாதன் இலங்கநாதன் கள்ளப்பாடு, முல்லைத்தீவு) வீரவேங்கை சேரமான் (சிவராசா சிவரூபன் 4ஆம் கண்டம் கற்சிலைமடு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

பதவியா கோங்வேவ இராணுவ மினிமுகாம் மீது நேற்று புலிகள் நடாத்திய வெற்றிகர தாக்குதல்ல் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ரி - 81 எல். எம். ஜி. | — 02 |
| ★ ஏ கே. எல். எம். ஜி | — 01 |
| ★ ரி - 81 - 1 ரக துப்பாக்கி | — 03 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — 07 |
| ★ ரி - 56 - 1 ரக துப்பாக்கி | — 03 |
| ★ ரி - 56 புதிய ரக துப்பாக்கி | — 05 |
| ★ சொட்கண் | — 07 |
| ★ சிக்னல் பிஸ்டல் | — 01 |
| ★ தொலைத்தொடர்புசாதனம் | — 01 |
| ★ ரி-81 எல். எம். ஜி ரம் மகசின் | — 08 |
| ★ ஏ.கே.எல் எம்.ஜி ரம்மகசின் | — 01 |
| ★ ரி - 81 மகசின் | — 15 |
| ★ ரி - 56 மகசின் | — 75 |
| ★ நடுத்தர ரவைகள் | — 16269 |
| ★ நேட்டோ ரவைகள் | — 18 |
| ★ ரி - 81 பைனட் | — 05 |
| ★ ஏ. கே. காஸ் ரவைகள் | — 28 |
| ★ ரி - 81 கைக்குண்டு | — 10 |
| ★ 60 மி மீ. எறிகணை | — 15 |
| ★ 60மி மீ பராலைட்எறிகணை | — 19 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டு | — 06 |
| ★ எம். 73 கைக்குண்டு | — 27 |
| ★ பெரிய குண்டு | — 02 |
| ★ 40 எம். எம். ஷெல் | — 03 |
| ★ 60 எம். எம். ஸ்கோப் | — 01 |
| ★ 69 ஆர். பி ஜி. ஸ்கோப் | — 01 |
| ★ ஜி பி. எம். ஜி லிங் | — 55 |
| ★ 60 எம் எம். போஸ்ட் | — 01 |
| ★ குரோஸ் (அண்டனா) | — 01 |
| ★ வயர் ரோல் | — 02 |
| ★ தலைக்கவசம் | — 18 |
| ★ சிக்னல் பிஸ்டல் காட்ரஜ் | — 14 |
| ★ சாஜ்ஜர் பற்றி | — 01 |
| ★ றெயின் கோட் | — 22 |
| ★ தண்ணீர் கான் | — 23 |
| ★ தண்ணீர் கோல்சர் | — 12 |
| ★ தொப்பி | — 20 |
| ★ பரட் தொப்பி | — 15 |
| ★ ஏ. கே. கோல்சர் | — 28 |
| ★ சப்பாத்து (சோடி) | — 68 |
| ★ கிட்பாக் | — 35 |
| ★ மில்ரி பெல்ட் | — 11 |

## வெளிக்கள உத்தியோகத்தர் சம்பளம் வழங்க தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களின் சம்பளங்களை உரிய காலத்தில் பெற்றுக்கொடுப்பதில் பொறுப்பான அதிகாரிகள் அசிரத்தை காட்டுவதாக வெளிக்கள உத்தியோகஸ்தர் மட்டத்தில் இருந்து அறியமுடிகின்றது.

மேற்படி ஊழியர்கள் அதிகாரிகளிடம் உரிய காலத்தில் சம்பளத்தைப் பெற்றுத்தரும்படி கேட்கின்றபொழுது அவர்கள் கப்பற்போக்குவரத்து மற்றும் நாட்டின சூழ்நிலை போன்ற காரணங்களைக் காட்டி தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவதாக இல்லை என மேலும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருவருகின்றது.

## கூட்டுவிசாரணை

(கொழும்பு)

அம்பாறை இராணுவ முகாமில் அணி வகுப்பின் போது குண்டு வெடிக்கவைக்கப்பட்ட விடயம் தொடர்பாக இராணுவத்தினரும், பொலிசாரும் கூட்டாக விசாரணை ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் நந்த இக் குண்டுவெடிப்பின் போது இருபத்தியாறு பேர் படுகாயமடைந்தது தெரிந்ததே.

## அரசின் பரிசை ஏற்க சிங்கள எழுத்தாளர் மறுப்பு

(கொழும்பு)

'பரட்பாவய'என்ற நாவலை [illegible] ரெட்ணா அரசு வழங்கிய 25,000 ரூபா பரிசையும், சான்றிதழையும் ஏற்க மறுத்துள்ளார். அடக்குமுறை ஆட்சியை நடத்தும் இந்த அரசிடமிருந்து இந்தப் பரிசுத் தொகையை ஏற்க தனது மனசாட்சி இடம்தரவில்லை என்று செனிவரெட்ணா கலாசார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

1991 இல் வெளியான சிறந்த [illegible] பரிசையும் [illegible] தார். இப்பரிசு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் ஞாயிறன்று மகியங்கனை சாகித்திய விழாவில் வழங்கப்படவிருந்தது நாவலாசிரியர் எச். ஏ. செனிவரெட்னா ஒரு வழக்கறிஞருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொடி வாரம நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 1992 ஆம் ஆண்டுக்கான கொடி வார நிகழ்ச்சிகள் யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடி வாரத்திற்குரிய சின்னங்கள், மற்றும் கொடிகள் என்பன கொழும்பிலிருந்து இன்னும் வந்து சேராமையே இந்த நடவடிக்கைக்கு காரணம் என்று தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கு

## 25 கோடி புனர்வாழ்வுநிதி தேங்கி கிடக்கிறதாம்

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட 25 கோடி ரூபாய் தேங்கிக் கிடப்பதாக அறியப்படுகிறது

இந்தத்தேக்கத்தினால் அடுத்து வரும் வருடங்களில் உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவித் தொகை குறையலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் இந்த மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் சேதமடைந்த அரச அலுவல்களைப் புனரமைக்கவும், உபகரணங்களையும் தளபாடங்களையும் வாங்கவும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இந்தத் தொகையை வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கிஇருந்தது.

ஆனால் இந்த மாவட்டங்களில்இருந்து இதுவரைவேலைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவில்லையாம்.

1993 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரத்ன இந்த எட்டு மாவட்டங்களின் அரச அதிபர்களையும் கேட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்பகுதியில் சட்டவிரோதமாக

## மரம் தறிப்போருக்கு அதிகாரிகள் உதவி

சட்ட விரோதமாக மரம் தறிப்பவர்கள் உயர்மட்ட அதிகாரிகளுடன் தீவிரமான தொடர்பு கொண்டிருப்பதினாலேயே இவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க முடியாதவர்களாக அதிகாரிகள் உள்ளனர் என கேகாலை மாவட்ட எம். பி. அதாவுட செனவிரத்ன கடந்த புதனன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கான குறைநிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்

சட்ட விரோதமாக மரம் தறிப்பவர்கள் கைது செய்யப்பட்டால் கூட உயர்மட்டங்களில் இருந்து வரும் உத்தரவுகளை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டு விடுகிறார்கள். இவ்வாறு மரம் தறிப்பவர்களுக்கு அரசியல் செல்வாக்கும் இருக்கிறது இதனால் மரம் தறிக்கப்படுவதனை தடுக்க முடிவதில்லை அது தொடரவே செய்கிறது எனத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பாடசாலைகளுக்கு

## 250 மில்லியன் ரூபா உதவி ஜேர்மன் வழங்க முடிவு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி, சுகாதாரம் சமூகசேவை, புனருத்தாரணம் ஆகிய திட்டங்களுக்கு 250 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவியை ஜேர்மன் அரசு வழங்க விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆனால் இம்மாகாணத்தின் பாடசாலைகளில் நிலவும் தளபாடப் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய மேற்படி தொகைக்கும் கூடுதலான நிதிதேவையென மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் விபரம் சமர்ப்பித்துள்ளார்.

இதற்காக வட - கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்கள் ஊடாக விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

## ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக பாடசாலைகளில்கடமையாற்றுவதற்கு 378 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களும் திணைக்கள கூட்டுத்தாபனங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்களுமே இந்த நியமனத்தை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்று மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் வழங்கினார்.

தற்போது இந் நியமனம் இரண்டு மாதங்களுக்கே வழங்கப்பட்டிருப்பதவும், ஆங்கில ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை அரசு வழங்கும் பட்சத்தில் இவர்களுக்கான சேவைக்காலம் 2 மாதங்களுடன் முடிவடையும்- வழங்கப்படாத பட்சத்தில் இந்நியமனம்மேலும் நீடிக்கப்படலாம் என திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன

(ச)

வைத்திய

தியசாலை, மற்றும் ஏனைய தரத்திலான அரச மருத்துவமனைகள் உட்பட யாழ். போதனா மருத்துவமனை ஆகியவற்றில் சில மருந்துப் பொருள்கள் முற்றாக தீர்ந்து விட்டது சில வகை மருந்துப் [illegible]

ஏர்ப்புவலி, [illegible], [illegible] டைக்கரப்பன் அம்மை,பொக்குளிப்பான், இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்களுக்கான நோய்த் தடுப்பு ஊசி மருந்து வகைகள் முற்றாகத் தீர்ந்து விட்டன இவற்றைவிட காயங்களுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் வலிகுறைக்கும் மருந்துப் பொருள்கள் ஆகியவையும் தீர்ந்துவிடும் நிலையில் உள்ளது மேற்படி மருத்துவமனைகளுக்குச் செல்லும் வெளி நோயாளர்களிற்கு வேண்டிய மருந்துப் பொருள்களில் பல வகையானவை வழங்கப்படுவதில்லை பதிலாக சில மருந்துப் பொருள்களின் பெயர்கள் எழுதப்பட்ட ''துண்டு'' கொடுக்கும் செயல் வழக்கமாகி விட்டது

இவ்வாறான நிலைமை குறித்து சம்மந்தப்பட்ட வைத்திய அதிகாரிகளிடம் வினவிய போது தாம் கேட்கும் அளவில் தமக்கு மருந்துப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்று கூறிவருகின்றனர்.

அரசு வடபகுதிக்கு அனுப்பி வைக்கும் மருந்துப் பொருள்கள் குறித்து கருத்து வெளியிட்ட அரச சார்பற்ற நிறுவன அதிகாரி ஒருவர் ''ஆனைப் பசிக்கு அரிசிப் பொரி'' என்று வர்ணித்தார்.

இந்த நிலை தொடர்ந்தும் நீடித்தால் பருவ மழை ஆரம்பித்துள்ளதால் நோயாளிகள் தொகையும் அதிகரிக்கும் இதனால் மருந்துப் பொருள்களுக்கான நெருக்கடி மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.